# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) - SPREE 2025

## (தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களைப் பதிவு செய்வதை ஊக்குவிக்கும் ESIC -யின் சிறப்பு திட்டம் - SPREE 2025)

---

1. **SPREE 2025 என்றால் என்ன?**

SPREE (Scheme to Promote Registration of Employers/Employees) **என்பது தொழிலாளர் அரசுக் காப்பீட்டுக் கழகம் (ஈ. ஸ். ஐ. சி / ESIC)** வழங்கும் ஒரு சிறப்பு திட்டமாகும். இது 1 ஜூலை 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை ஒரு முறை மட்டும் வழங்கப்படும் வாய்ப்பாகும். இதில், முதலாளிகள் தங்களது தொழிற்சாலை**கள்**/ நிறுவனங்களையும் மற்றும் தகுதியுள்ள அனைத்து பணியாளர்களையும் முந்தைய காலத்திற்கான நிலுவைத் தொகை பற்றிய கோரிக்கைகள் எதுவுமின்றி பதிவு செய்யலாம்.

2. **இந்த திட்டத்தின் மூலம் யார் பயன்பெறலாம்?**

- ESI திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள, ESI திட்டத்தின் கீழ் இன்னும் பதிவு செய்யப்படாத, 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்கள் (கடைகள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், சினிமா ஹால்கள், சாலை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், செய்தித்தாள் நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் நகராட்சி/மாநகராட்சி ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள்)
- ESI திட்டத்தின் கீழ் தற்காலிக, சாதாரண அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தகுதிவாய்ந்த ஊழியர்களையும் இதுவரை பதிவு செய்யாத தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள்.

3. **SPREE 2025 திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் ஏன் பதிவு செய்ய வேண்டும்?**

- இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் பதிவு செய்த தேதிக்கு முந்தைய காலகட்டத்திற்கான பதிவுகள் அல்லது நிலுவைத் தொகைகள் குறித்து எந்த ஆய்வோ அல்லது கோரிக்கையோ இருக்காது.
- கடந்த காலத்திற்கான பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.
- கடந்த காலத்தில் பதிவு செய்யாததற்கான சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

**4. பணியாளர்களுக்கு (Insured Persons) கிடைக்கும் நன்மைகள் என்ன?**

தங்கள் நிறுவனங்கள் ESI திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, ஊழியர்கள் (காப்பீடு செய்யப்பட்ட நபர்) பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து கீழ்காணும் நன்மைகளை பெறுவார்கள்:

- தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கான மருத்துவ சேவைகள்.
- **பணப்பயன்கள்** - நோய்க்கால பயன், மிகைப்படுத்தப்பட்ட நோய்கால பயன், நீடிக்கப்பட்ட நோய்கால பயன், தற்காலிக ஊன உதவி பயன், நிரந்தர ஊன உதவி பயன், சார்ந்தோர் உதவி பயன், பேறுகால உதவி பயன், பிரசவ செலவுகள் (வசதி இல்லாத இடங்களில் மட்டும்) , ஈமச்சடங்கு செலவுகள் மற்றும் வேலை இழப்பு உதவித்தொகை (RGSKY & ABVKY)
- காப்பீடு செய்யப்பட்ட நபரின் வாரிசுகளுக்கு ESIC மருத்துவ கல்லூரிகளில் MBBS/BDS மருத்துவ பட்டபடிப்பிற்கான இட ஒதுக்கீடு.
- 1948 ஆம் ஆண்டு ESI சட்டத்தின் கீழ் நீண்டகால பாதுகாப்பு.

**5. SPREE 2025 திட்டத்தின் கீழ் பாதுகாப்பு எப்போது தொடங்கும்?**

- தொழிற்சலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்த நாளிலிருந்து பாதுகாப்பு அமலாகும்.
- பணியாளர்களின் பாதுகாப்பும் தொழிலாளர் அறிவித்த நாளிலிருந்தே அமலாகும்.
- பதிவு செய்யப்பட்ட நாளுக்கு முந்தைய காலத்திற்கு எந்த பங்களிப்பு தொகையும் கேட்கப்படாது. அதேபோல் முந்தைய காலத்திற்கான பலன்கள் கிடைக்காது.

**6. SPREE 2025 இன் கீழ் பதிவு செய்யும் நடைமுறை என்ன?**
முதலாளிகள் தங்கள் நிறுவனங்களை கீழ்காணும் வழிகளில் பதிவு செய்யலாம்:

- **ESIC இணையதளம்**: https://www.esic.gov.in
  **ESIC போர்டல் வழிகாட்டி**:
  https://portal.esic.gov.in/ESICInsurance1/ESICInsurancePortal/Employer_Employee%20Registration%20through%20ESIC%20portal.pdf
- **Shram Suvidha Portal**: https://registration.shramsuvidha.gov.in/user/register
  **Shram Suvidha Portal வழிகாட்டி:**
  https://registration.shramsuvidha.gov.in/users/user_manual/RVNJQw%3D%3D
- **Public/Private Limited** நிறுவனங்கள் **MCA Portal** மூலமாகவும் பதிவு செய்யலாம். https://www.mca.gov.in/

**நிறுவனங்களை ESI திட்டத்தில் பதிவு செய்ய தேவையான ஆவணங்கள்**

- PAN அட்டை
- GST பதிவு சான்றிதழ் (GST Registration Certificate)
- தொழிற்சாலை உரிம எண் (Factory License Number) / MSME எண்
- ஊழியர்களின் விவரங்கள் (ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஊதியம்)
- நிறுவனத்தின் முகவரி ஆதாரம் (Address Proof of the establishment)
- நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்கள் (Bank Account Details of establishment)
- (உரிமையாளர்/பங்காளர்கள் பங்காளர்கள்/மேலாளர்) ஆதார், முகவரி , மின்னஞ்சல் முகவரி மற்றும தொலைபேசி எண்.
- உரிமையாளர்/பங்காளர்களுடைய மாதிரி கையொப்பம் (ESIC மற்றும் EPFO ஒருங்கிணைந்த பதிவு செய்பவர்களுக்கு மட்டும் தேவை)

**7. ஆய்வுகள் அல்லது அபராதங்கள் விதிக்கப்படுமா?**

**இல்லை.** SPREE 2025 திட்டத்தின் கீழ்:

- பதிவு செய்யப்பட்ட நாளுக்கு முந்தைய காலத்திற்காக எந்த ஆய்வுகளும் நடத்தப்படாது.
- கடந்த காலத்திற்கான பங்களிப்பு தொகைகள் கேட்கப்படமாட்டாது.
- இது ஒரு சுயவிருப்பத்தின் அடிப்படையிலான, சிரமமில்லாத பதிவு திட்டமாகும்.

**8. SPREE 2025 தேசிய நோக்கங்களை எவ்வாறு ஆதரிக்கிறது?**

இந்தத் திட்டம்:

- அனைத்து பணியாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்குவதை (Universal Social Security) ஊக்குவிக்கிறது.
- தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் (கடைகள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், சினிமா அரங்குகள், சாலை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், செய்தித்தாள் நிறுவனங்கள், தனியார் மருத்துவ நிறுவனங்கள், நகராட்சி/மாநகராட்சி தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள்) உள்ள தினக்கூலி, தற்காலிக மற்றும் சாதாரண பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பை விரிவுபடுத்துகிறது.
- வணிகத்தை எளிமையாகச் செய்யும் நோக்கத்தை (Ease of Doing Business) ஆதரிக்கிறது.

**<u>உதவி மற்றும் சந்தேகங்களுக்கு,</u>**

1. கோவை சார் மண்டல உதவி மைய எண் : 0422-2314430/2362329 மற்றும் மின்னஞ்சல் முகவரி itcell-srokovai@esic.nic.in -யில் தொடர்பு கொள்ளலாம்.

2. மேலும் விவரங்களுக்கு https://www.esic.gov.in இணையதளத்தைக் காணவும், அல்லது அருகில் உள்ள ESIC **கிளை அலுவலகத்தை** தொடர்பு கொள்ளவும்.

*********************

**Annexure B**

## FAQs – SPREE 2025 (Scheme to Promote Registration of Employers/Employees)

### 1. What is SPREE 2025?

SPREE (Scheme to Promote Registration of Employers/Employees) is a special initiative by the Employees' State Insurance Corporation (ESIC), offering a one-time window from 1st July to 31st December 2025 for employers to register their factory/establishments and all eligible employees without any demand of dues for the past period.

### 2. Who can benefit from this scheme?

• Employers of factories or establishments (shops, hotels & restaurants, cinema halls, Road Motor Transport Establishments, Newspaper Establishments, Private Medical Institutions, educational institutions and contract and casual employees of municipal corporations) with 10 or more employees, situated in implemented areas, which are not yet registered under ESI Act despite being eligible.

• Employers who have not registered all eligible employees including temporary, casual, or contractual workers under ESI Act.

### 3. Why should employers register under SPREE 2025?

• No inspection of past records or demand for dues for periods before the declared date of registration by employer under this scheme.

• No contribution liability for the prior period.

• Immunity against any action for non-registration in the past.

### 4. What is the key benefit for employees?

Once registered, employees (Insured Persons) get access to the following from the date of registration of their employer:

• Medical care for themselves and their families.

• Cash benefits in cases of sickness, maternity, injury, or death due to employment.

• Protection under the ESI Act, 1948, offering long-term security.

### 5. What is the registration process under SPREE 2025?

Employers may register their establishment through:

- ESIC Portal: https://www.esic.gov.in
- For Help regarding registration through ESIC Portal:- https://portal.esic.gov.in/ESICInsurance1/ESICInsurancePortal/Employer_Employee_registration_through_portal.pdf
- Shram Suvidha Portal (To register, please visit the given below links :- https://registration.shramsuvidha.gov.in/user/register
- MCA Portal

**6. What is the date of coverage under SPREE 2025?**

• The employer's coverage will begin from the date of registration by them at the time of registration under this scheme.
• The employee's coverage will also be from the date declared by the employer.
• No past dues of contribution will be claimed and no retrospective benefits will apply before the date of registration of the employer under this scheme.

**7. Will there be any inspections or penalties?**

No. Under SPREE 2025:
• No inspections will be conducted for the period prior to the date of coverage.
• No contributions of previous period will be demanded.
• It is a voluntary, hassle-free scheme.

**8. How does SPREE 2025 support national objectives?**

It promotes:
• Universal social security coverage.
• Extending coverage to all employees including temporary and casual workforce in factories and establishments (shops, hotels & restaurants, cinema halls, Road Motor Transport Establishments, Newspaper Establishments, Private Medical Institutions, educational institutions and contract and casual employees of municipal corporations)

- Supports the goal of Ease of doing business

**Need Help?**

For assistance or queries, visit https://www.esic.gov.in
Or contact your nearest ESIC Branch/Regional Office.